கருவறை முகவரி

சிக்குண்டு கிடக்கும் பெண்ணியம்

மலாயாப்பல்கலைகழகத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் தலைமை ஆசிரியர்களுக்கான மாநாடு ஒன்றில் கலந்துகொண்டபோது, படித்தப் பெண்களிடையே பெண்ணியம் சார்ந்த கருத்துக்களை அனுபவபூர்வமாகக் கண்டறிய முடிந்தது.

ஒரு பணிமனையில் ஈடுபட்டிருந்த தருணத்தில் ஒரு தலைமையாசிரியையிடம் இதுபற்றி பேசும் வாய்ப்பை உண்டாக்கிக் கொண்டேன். தன்னை அந்தத் தலைமை ஆசிரியை அறிமுகப்படுத்திக் கொண்ட விதமே ஆணாதிக்கப் பிடியில் இருக்கும் பெண்களின் நிலை இன்னும் எத்தனை நூற்றாண்டுகளுக்குத் தொடரப்போகிறதோ என்ற சந்தேகத்தை உரசிய வண்ணம் இருந்தது.

நீங்கள் எந்த மாநிலத்துக்காரர் என்ற என் வினாவுக்கு, தான் பேரா மாநிலத்தைச் சேர்ந்தவள் என்ற பதிலோடு தான் 'இன்னாரின்' மனைவி என்ற பதிலையும் சேர்த்தே தந்தார். 'இன்னாரின்' மனைவி என்று அவர் சொல்லும்போது அதில் பெருமை பாலைப்போல் பொங்கி வழிந்ததை அவரின் முகக்குறிகளால் உணரமுடிந்தது.

தான் இந்தப் பள்ளியில் தலைமை ஆசிரியை என்று சொல்லியிருந்தால் அவரின் அறிமுகம் நிறைவானதாக இருந்திருக்கும். தான் இன்னாரின் மனைவி என்று அவர் கோடிட்டுக்காட்டி, தன் கணவனை முன்வைத்து, தன்னை ஏன் பின்தள்ளிக் கொள்ளவேண்டும் என்ற வினா இன்றளவும் என்னைப் பின் தொடர்ந்த வண்ணமிருக்கிறது. தனக்கென்று தனித்துவமான அடையாளமும், அங்கீகாரமும் இருக்கும்போதும் ஒரு ஆணின் நிழலுக்குள் பதுங்கிப் பெண்கள் எப்படி ஆணாதிக்கச் சமூகத்திடமிருந்து விடுதலை பெறமுடியும்? இப்படி முக்கியமான பொறுப்பிலிருக்கும் பெண்களே, ஆண்களைச் சார்ந்திருக்கும் போது, சாமான்ய பெண்களின் மனப்போக்கு எப்படியிருக்கும் என்று சொல்வது அவசியமற்றுப் போகிறது.

மகளாக இருக்கும்போது தந்தைக்கும், தங்கையாக இருக்கும் போது அண்ணனுக்கும், மனைவியாக இருக்கும் போது கணவனுக்கும், வளர்ந்த மகனுக்குத் தாயாக இருக்கும் போது அவசியமற்ற காரணங்களுக்குக்கூட ஆண்களுக்கு அடங்கிப் போகும் பெண்களை இந்தச் சமூகம் தலைமுறை தவறாமல் சந்தித்த வண்ணம் இருக்கிறது.

பற்சக்கரத்தின் சங்கிலியைப்போல இந்த நிலை தொடர்ந்து கொண்டுதானிருக்கிறது.

இந்தப் பெண்கள் மரபுரீதியாகப் பள்ளங்களை நோக்கிப் பாயும் நீரின் மாறாத தன்மை போன்று ஆண்களுக்கு அடைக்களமாகும் நிலை எப்போது நீங்கும் என்று அரிதியிட்டுக் கூறிவிடமுடியவில்லை.

ஆணாதிக்கச் சமூகத்தில் வாழ்வதால்தான் பெண்களிடையே பெண்ணடிமைத்தனம் அடர்ந்த காட்டின் மண்ணில் பதிந்த ஈரம் போல ஊறிப்போய்க் கிடக்கிறது என்று சொல்வதுகூட சரியான கூற்றில்லை.

மனரீதியாகத் தங்களை சுயவிலங்கிட்டுக் கொள்ளும் பெண்களைச் சந்திக்கும்போது இந்த எண்ணம் எழுகிறது.

பெண்கள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற தாயின் உபதேசமும், மாமியார்கள் மருமகள்களை தன் பிடிக்குள்ளேயே வைத்துக்கொள்ள விரும்பும் நிலையும் பெண்களைப் பெண்களே அடிமைப்படுத்திக்கொள்ளும் போக்கும் இன்றும் நடந்து கொண்டுதானிருக்கிறது. பழமையில் தோய்ந்துபோன பெண்ணிய மரபுகளை எப்படி உடைத்தெறிய முடியும் என்பதற்கு நல்ல உதாரணம் ஜெயமோகனின் 'கூந்தல்' சிறுகதை.

கூந்தல் கதையில் வரும் நீலாவின் ஆழ்மனப்பதிவுகளை வெளிக்கொணர்வதற்கு ஹிப்நாடிசம் முறையைக் கையாளும் ஒரு டாக்டரின் ஆய்வாகக் கதையை எழுதுகிறார் ஜெயமோகன்.

பழைய மரபுகளால் கட்டிப்போடப்பட்ட குடும்பம் ஒன்றில் வாழ்க்கைப்படுகிறாள் நீலா. இதய நோயாளியாக இருக்கும் தன் மகனுக்கு வைத்தியரின் ஆலோசனையை மீறியும் திருமணம் முடிக்கிறார் தந்தை. சந்ததி இல்லாதவர்களுக்குரிய புத் என்ற நரகத்துக்குப் போவதற்கு அஞ்சி அவளின் மாமனார் இந்தத் திருமணத்தை முடித்து வைக்கிறார். வைத்தியர் சொன்னபடியே மகன் இறந்து போகிறான். அதற்குப் பின்னர்தான் நீலாவின் துயரங்கள் முட்புதரென மண்டிப்படர ஆரம்பிக்கிறது.

தன் வயிற்றில் பிறந்த மகனையே நீலாவிடம் அண்ட விடாமல் செய்துவிடுகிறார்கள். நீலா தலையில் முடி இம்மியளவுகூட வளரவிடாமல் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையன்றும் நாவிதனை வீட்டுக்கு அழைத்து மழித்தும் விடுகிறார்கள். தலையில் சிறு முட்களென வளரும் முடியை ஸ்பரிசிக்கும் போது அவளுக்குள் உண்டாகும் கிளர்ச்சியும் ஒவ்வொரு வெள்ளியும் காத்திருந்து காவு கொடுக்கப் படுகிறது. தாசிக்கு

மட்டும் தான் நீண்ட கூந்தல் இருக்க வேண்டும். விதவைகளுக்கு அது தேவையற்றது. அது உடர்சார்ந்த கிளர்ச்சியை உண்டாக்கும் என்று சுடுவார்த்தைகளாலும் தீண்டுகிறார்கள். அவளிடம் அன்பான வார்த்தை பறிமாற்றம் கூட வைத்துக்கொள்வதில்லை, மாறாக காலை முதல் அந்தி வரை ஓயாமல் வேலை ஏவியபடியும் அவளை துன்புறுத்துகிறார்கள். இப்படி இடையாறாது கொடுமைக்கு ஆளாகும் அவள் உள்மன ஆசைகளை அடையாளம் காட்ட மேலும் வினாக்களை எழுப்புகிறார் டாக்டர்.

முடியை நீளமாக வளர்த்து அதனை நீவி, அதன் அழகில் வியக்க வேண்டும் என்ற அவளின் ஆசை வளரும் முடியைப்போல் இரக்கமற்று நறுக்க நறுக்க, அதனையும் மீறி வெட்ட வெட்ட வளரும் குருத்து போல அவளின் முடி சார்ந்த கனவுகளும் வளர்ந்து வெளிப்படுகின்றது.

தன்னை உப்பரிகையில் நிற்கும் இளவரசியாகவும், ஓர் அழகான இளவரசன் தன் விரித்த கூந்தலை கைப்பற்றி ஏறிவந்து நீலாவை ஆறத்தழுவிக் கொள்வதாகவும் ஹிப்நாட்டிச உறக்கத்தில் இருக்கும்போது பேசுகிறாள். இப்படி ஒரு விதவையின் மன ஆசைகள் பலவற்றை வெளிக்கொணர்கிறார் கதாசிரியர். வாழ்க்கையில் அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்ட நீலாவின் நிறைவேற்றப்படாத ஆழ்மன ஆசைகள் இன்னும் பல, மதர்த்த மண்ணிலிருந்து வெடித்துக் கிளம்பும் சிறுவிதைப் போல, வெளிப்படுகிறது இந்த ஹிப்நாட்டிச முறை வைத்தியத்தில்.

கதை அடுத்தக் கட்டத்துக்குப் பாய்கிறது.

நீலாவின் கொள்ளுப் பேத்தி, அவள் பெயரும் நீலாதான். அவளும் கூந்தல் பற்றிய சிக்கலில் மாட்டிக்கொள்கிறாள். மீன் வலையில் சிக்குண்டத் திமிங்கலம் அதனை கிஞ்சிற்றும் பொருட்படுத்தாமல் அறுத்தெறிந்து கொண்டு வெளிவருவதுபோல இந்தக் கொள்ளுப்பேத்தி நீலா எப்படிப் பெண்ணியம் சார்ந்த புராதன கட்டமைப்புக்களை உடைத்துச் சிதறடிக்கிறாள் என்பதைக் காட்டிச் செல்கிறது அடுத்தக்கட்ட கதை.

நீலாவும், நீலாவின் கணவரும் உயர் பதவியில் உள்ளவர்கள். அவளின் நீண்ட கூந்தலைப் பார்த்தவன், அதனால் ஈர்க்கப்பட்டு அவளை மணமுடிக்கிறான். அவளின் கூந்தல் மீதுதான் அவனின் காதலும் காமமும் உருக்கொள்கிறது.

அவளுக்குப் பெரிய பதவி கிட்டுகிறது. அந்த அவசர அலுவலுக்கு அவளின் நீண்ட கூந்தல் கரு நாகமென குறுக்கிடுகிறது. அவளுக்குக் கிட்டிய பரபரப்பான வாழ்க்கைக்கு கூந்தலை பராமரிப்பது நேரத்தை விரையமாக்கும் செயலாகிறது. அவளின் நிறுவன டைரக்டரும் கூந்தலை நறுக்கி குறுக்கிக் கொண்டால் அவளின் தோற்றம் பதவிக்கு பொருந்தும் என்றும் கருத்துரைக்கிறார். எனவே கூந்தலை வெட்டிவிட வேண்டும் என்ற நீலாவின் யோசனையை கணவன் நிராகரித்துவிடுகிறான். இருவருக்கும் பூசல் முத்துகிறது. அவர்களின் பிணைப்புக்கு ஊறு விளைவிக்கிறது. தன் திறமையைக் காட்டுவதற்கும் வாழ்க்கையில் ஜெயிப்பதற்கும் அங்கீகாரம் பெறுவதற்கும் கூந்தல் தடையாக இருப்பதை கணவன் உணராமல் இருப்பதும், வெறுப்பை உமிழச் செய்கிறது. கேவலம் கூந்தலுக்காக மட்டுமே தன்மேல் காமம் பொழியும் கணவனின், அபிப்பிராயத்தை நீலாவால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

கூந்தலை நறுக்காதே, வேலையை விட்டுத் தொலை என்ற கணவனின் பிடிவாதம் அவளின் முடியைப்போலவே நீண்டு வளர்கிறது.

இறுதியில் தன் சுயமுன்னேற்றத்தை முன்வைத்து ஓர் இரவு கூந்தலை நறுக்கிப் பொட்டலம் கட்டி தன் கணவனுக்கே அனுப்பி வைக்கிறாள். தன் உயர் பொறுப்பைவிடவும், தன் தனித்துவத்தை விடவும், தன் அங்கீகாரத்தை விடவும், தன் விடுதலை உணர்வை விடவும் தன் கூந்தலையே பெரிது படுத்தும் கணவனுக்கு வேறென்னதான் தரமுடியும்?

கதையின் முதல் கட்டத்தின் காட்டும் நீலாவுக்கு, இந்தச் சம்பவம் மிகுந்த மகிழ்ச்சியையும், நிம்மதியையும் தருவதாகக் காட்டுகிறார் ஜெயமோகன்.

பெண்கள் அடக்குமுறைகள் வெடித்து வெளிப்படும்போது எவ்வளவு உக்கிரமாகச் சிதறுகிறது என்பதை கதையின் இரண்டாவது நீலாவின் மூலம் காட்டிவிடுகிறார். பெண்கள் சுயசிந்தனை உள்ளவர்களாகவும் ஆண்களைச் சார்ந்து வாழ்வதும், எக்காலத்திலும் அவர் திறமைகள் வெளிப்பட வழிவகுக்காது என்ற நிதார்சனத்தை நேர்த்தியோடு காட்டிச் செல்கிறார் ஜெயமோகன்.

கோ.புண்ணியவான்